**10. அசதியின் கதை**

இவன் ஆயர் குலத்தில் தோன்றியவன். ஆடுகள் பல வற்றை இவன் மேய்த்துக் காத்து அதனால் தன்னுடைய செல்வத்தை நன்கு பெருக்கினான். தன்பால்



வரும் விருந்தி னர்கட்கு உணவளித்து மகிழச் செய்தான். அதனால் அசதி யின் செல்வம் நாளும் பெருகியது. ஒருநாள் ஔவையார் இவனுடைய இல்லத்திற்குச் சென்றார். ஔவையாரைத் தக்கவாறு போற்றிப் பாராட்டி விருந்தூட்டி மகிழ்வித்தான். என்று அதனால் மகிழ்வடைந்த ஔவையார் இவன்மீது கோவை யொன்று பாடினார். அக்கோவை அசதிக் கோவை பெயர் பெற்றது. இதனால் அசதி மேலுஞ் சிறந்த செல்வத் தைப் பெற்றான். முகமானது நன்கு மலரப்பெற்று விருந்தின ரைப் போற்றுகிறவன் வீட்டில் 'திருமகள் மனமகிழ்ந்து சிறந்து விளங்குவாள் என்பது அசதியின் இடத்தில் உண் மையாகியது.

[விருந்தோம்பல்]